MAY 2023

U/ID 33202/UCT1B/ UCL1B

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 30 சொற்களில் விடையளிக்க.

1. உரை என்றால் என்ன? அதன் வகைகளைச் சுட்டுக.

2. சூத்திரத்தின் இலக்கணம் யாது?

3. நூலின் பயன் யாது? அவற்றை எழுதுக.

4. உடனிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன?

5. மொழி இறுதி எழுத்துக்கள் யாவை?

6. நிகழ்கால இடைநிலை யாவை? சான்று தருக.

7. பகாப்பதம் என்றால் என்ன?

8. வேற்றுமைப் புணர்ச்சி இலக்கணம் தருக.

9. ஐந்து எனும் எண்ணுப்பெயர் பிற எண்களுடன் புணரும் நிலைகள் பற்றி எழுதுக.

10. வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் யாவை? விளக்குக.

11. அகம் எனும் சொல்லின் சிறப்பு விதி யாது?

12. சாரிகை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடையளிக்க.

13. வினா எழுத்துக்கள் யாவை? அதன் வகைகளைத் தருக.

14. நூலின் இலக்கணம் தந்து அதன் வகைகளை விவரிக்க.

15. பகுபத உறுப்புக்களைச் சான்றுடன் தருக.

16. விகாரப் புணர்ச்சி – விளக்குக.

17. பத்து முன் இரண்டு புணரும் நிலையை விவரிக்க.

18. ணகர, னகர ஈறு திரிதல் இடங்கள் யாவை? விளக்குக.

19. எல்லாம், எல்லாரும், எல்லீரும் ஆகிய சொற்கள் புணரும் நிலையைச் சான்றுடன் எழுதுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடையளிக்க.

20. நிலம், மலை, நிறைகோல் இவற்றின் பண்புகளை நல்லாசிரியரின் பண்புகளோடு ஒப்பிட்டு விளக்குக.

21. மொழி முதல், இறுதி எழுத்துக்களைச் சான்றுடன் காட்டி விளக்குக.

22. காலம் காட்டும் விகுதிகள் யாவை? சான்றுடன் விவரிக்க.

23. பொதுப்பெயர், உயர்திணைப் பெயர் முன் நாற்கணம் புணரும் இடங்களை சான்றுடன் விளக்குக.

24. சாரிகைகளைச் சான்றுடன் விளக்குக.

———————